Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



மாங்காடு நகராட்சி ஆணையர் அவர்களின் செயலாணைகள்

பிறப்பிப்பவர் : ரா.நந்தினி பி.எஸ்சி.,

நி.மு.எண்.1150/2023/எப்1 நாள். 13.05.2025

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம் – காஞ்சிபுரம் மாவட்டம் – மாங்காடு நகராட்சி-மாங்காடு "ஆ" கிராமம், நில அளவை எண்.482/375B-ல் அடங்கிய 6070 ச.மீ பரப்பளவில் அமையவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்குதல் – சார்ந்து.

பார்வை:

1) உறுப்பினர்செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமகடித எண். CMDA/L1/0129/2023, நாள்.24.04.2023.
2) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்களுக்கு அரசு சார்பாக வழங்கிய தானப்பத்திரம் எண்.14302/2023, நாள்.18.07.2023 (குன்றத்தூர் சார்பதிவு அலுவலகம்).
3) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமதிட்ட அனுமதி எண்.15530, நாள்.07/08/2023 (P.P.D/L.O/214/2023).
4) மாங்காடு நகராட்சி மன்ற தீர்மானம் எண்.453 , நாள்.27.09.2023.
5) நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டி.பி-2 நாள்.20.10.2022, அரசாணை எண்.181 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.09.12.2020 மற்றும் அரசாணை எண்.141, வீ.வ.ம.ந.வளர்ச்சி துறை நாள்.16.07.2022.
6) மாங்காடு நகராட்சி பொறியாளரின் ஆய்வு குறிப்புரை நாள்.21/04/2025.
7) மாங்காடு நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் குறிப்புரை நாள்.30.04.2025.
8) மாங்காடு நகராட்சி வருவாய் ஆய்வாளர் அவர்களின் மனைப்பிரிவு காலிமனை வரி விதிப்பு எண்.180/006/900878.
9) மனைப்பிரிவு கட்டணம் ரூ.3,78,000/- (செலுத்துச்சீட்டு,எண். 180/001/02/25-26/0001720, நாள்.13.05.2025) (வங்கி கேட்பு உண்டி எண்.038114, நாள்.13.05.2025 – Bank of India)
10) பராமரிப்பு கட்டணம் திரும்ப செலுத்துதல் ரூ.1,50,000/- (செலுத்துச் சீட்டு,எண்.180/001/02/25-26/0001721, நாள்.13.05.2025) (வங்கி கேட்பு உண்டி எண்.038116, நாள்.13.05.2025 – Bank of India)
11) தொடர்புடைய ஆவணங்கள்

.....

ஆணை:-

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட மாங்காடு "ஆ" கிராமம், நில அளவை எண். 482/375B-ல் அடங்கிய 6070 ச.மீ பரப்பளவில் புதிய குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு.அபயகுமார் என்பவரால் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டு, பார்வை 1ல் காணும் உறுப்பினர்செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும கடிதத்தின்படி சாலை அமைப்பு (Road Pattern) வரைபடம் அங்கீகரிக்கப்பட்டது. பார்வை 2ல் காணும் தானப்பத்திரத்தின் மூலம் இந்நகராட்சி சார்பாக உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் தானம் பெறப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அவர்களது கடிதத்தின் மூலம் மேற்படி நில அளவை எண்ணில் 43 குடியிருப்பு மனைகள் ஒதுக்கீடு செய்து பார்வை 3ல் காணும் திட்ட அனுமதி எண்.15530, (P.P.D/L.O/214/2023) நாள்.07/08/2023ன் மூலம் மனைப் பிரிவுக்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, பார்வை 5ல் காணும் சுற்றறிக்கை மற்றும் அரசாணையில் தெரிவித்துள்ளவாறு, பார்வை 6ல் காணும் இந்நகராட்சி பொறியாளரின் குறிப்புரையின் படி அடிப்படை வசதிகளை திரு.அபயகுமார் தனது சொந்த செலவிலேயே செய்து முடித்துள்ளார். பார்வை 4ல் காணும் மாங்காடு நகராட்சி மன்ற தீர்மானத்தில் இறுதி ஒப்புதல் வழங்க அனுமதி அளிக்கப்பட்டது. மனைப்பிரிவு அங்கீகார கட்டணமாக ரூ.3,78,000/-ஐ செலுத்துச்சீட்டு எண். 180/001/02/25-26/0001720, நாள்.13/05/2025-ன் படி வங்கிகேட்பு உண்டி எண்.038114 நாள்.13.05.2025 Bank of India) மூலம் வசூலிக்கப்பட்டுள்ளது. பார்வை 10ல் காணும் பராமரிப்பு கட்டணம் திரும்ப செலுத்துதல் கட்டணம் ரூ.1,50,000/-செலுத்துச்சீட்டு,எண்.180/001/02/25-26/0001721, நாள்.13.05.2025) (வங்கி கேட்பு உண்டி எண். 038116, நாள்.13.05.2025 Bank of India) மூலம் வசூலிக்கப்பட்டுள்ளது.

எனவே மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட மாங்காடு "ஆ" கிராமம், நில அளவை எண். 482/375B-ல் அடங்கிய 6070ச.மீ பரப்பளவில் 43 குடியிருப்பு மனைகள் அமைக்க, மனைப்பிரிவு செய்து மேற்படி நிலத்தின் உரிமையாளர் திரு.அபயகுமார் என்ற பெயரில் மனைப்பிரிவு அனுமதி எண்.008/2025-2026 என எண்ணிட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் மனைப்பிரிவு அங்கீகாரம் அளித்து உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும திட்ட அனுமதி எண். 15530, (P.P.D/L.O/214/2023) நாள்.07.08.2023 ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தவறாது கடைபிடித்தல் வேண்டும்
2. இந்நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட இடங்களில் எக்காரணத்தை கொண்டும் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது.
3. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சென்னை பெருநகரவளர்ச்சிக் குழுமத்தால் மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள விவரப்படி மனைகள் பிரித்து மாற்றம் செய்யாமல் விற்பனை செய்தல் வேண்டும் மற்றும் மனைப்பிரிவு வரைபடத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யவேண்டும்.
4. தணிக்கைத்தடைக்கு உட்பட்டதாகும்
5. மனைப்பிரிவு தொடர்பான இடத்தில் (புலஎண்ணில்) உரிமை பிரச்சினை வருமேயானால் தாங்களே சிவில் / குற்றவியல் நீதிமன்றத்தில் தீர்வு பெற்றுக்கொள்ளவேண்டும். எந்த சூழ்நிலையிலும் நகராட்சி, சென்னை பெருநகரவளர்ச்சிக் குழுமம்பொறுப்பேற்காது.
6. தவறான ஆவணம் ஏதேனும் சமர்ப்பித்து அனுமதி பெறப்பட்டது பின்னர் தெரியவந்தால் எந்த நேரத்திலும் எவ்வித முன் அறிவிப்புமின்றி வழங்கப்பட்ட உத்திரவு இரத்து செய்யப்படும்

7 நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.12843/2022/டிபி-2 நாள்.20.10.2022ன்படி மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஐந்து வருடங்கள் அல்லது 60 சதவிகித மனைகள் அபிவிருத்தி அடைந்தபின் இவற்றில் எது அதிக காலமோ அதுவரை முறையாக பராமரிக்கும்பொறுப்பு மனைப்பிரிவு விண்ணப்பதாரர்/ மனைப்பிரிவு உரிமையாளரைச் சாரும்.

8 பராமரிப்பு காலத்தில் பராமரிப்பு பணிகளை மனைப்பிரிவு விண்ணப்பதாரர் / மனைப்பிரிவு உரிமையாளர் மேற்கொள்ள தவறினால் மேற்காணும் பணிகள் உள்ளாட்சி வாயிலாக செய்யப்பட்டு அதற்கான தொகை மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட வைப்பு தொகையிலிருந்து ஈடுசெய்யப்படும். பராமரிப்பு காலம் முடிந்த பின்னர் உரிய ஆய்வுக்கு பின்னர் மீதி வைப்புத்தொகை திரும்ப வழங்கப்படும்.

ஆணையர்

மாங்காடு நகராட்சி

இணைப்பு:-

அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் - 2 பிரதிகள்

பெறுநர் :-

திரு.அபயகுமார்

எண்.24/43, கச்சேரி ரோடு,

மயிலாப்பூர், சென்னை-600004.

வருவாய் ஆய்வாளர், மாங்காடு நகராட்சி,

(காலிமனைவரி தொடர்ந்து வசூலிக்க இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது)

நகல் :-

5. உறுப்பினர்செயலர், சென்னை பெருநகரவளர்ச்சிக் குழுமம், எழும்பூர், சென்னை - 8
6. சார்பதிவாளர், குன்றத்தூர் சார்பதிவகம், குன்றத்தூர், சென்னை - 600069.
7. வட்டாட்சியர், வருவாய்த்துறை, குன்றத்தூர்
8. நகராட்சிபொறியாளர், மாங்காடு நகராட்சி

(சாலைப் பதிவேட்டில் பதிந்து உரிய நடவடிக்கைக்கு)



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate